## EASTERN UNIVERSITY, SRILANKA
## Faculty of Commerce and Management
## First Examination in Bachelor of Business Administration 2006/07(Proper/Repeat) & Bachelor of Economics 2007/08 (Proper/Repeat) (Dec 2009/ Jan 2010) External
## EXB/EXE 1024 – Principles of Management

LIBRARY
11 JAN 2010
Eastern University, Sri Lanka

**Answer All Questions**

**Time: 03 hours**

---

Q1. பின்வரும் விடய ஆய்வினை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

### Tata வின் நிலைமாற்றம்

56 வயதுடைய Ratan Tata இந்தியாவின் மிகப்பெரிய வியாபாரக் குடும்பத்தின் தலைவராவார். இவர் தனது பரந்துபட்ட இணைந்த வியாபாரத்தினை நவீன உலக தரவரிசையிலான போட்டியாளராக மாற்றுவதற்கு விரும்பினார். இருந்தபோதிலும் இந்நோக்கத்தை அடைவதற்காக அவர் தனது குழுமத்தியிலுள்ள 46 பல்வேறுபட்ட கம்பனிகளை தூண்டவேண்டி இருந்தது. இக்கம்பனிகள் தேயிலையில் இருந்து உருக்கு வரையான பல்வேறுபட்ட பொருட்களின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன.

இது வருடாந்தம் 51 மில்லியன் வருமானம் ஈட்டுகின்ற Tata குழுவிற்கு ஓர் இலகுவான காரியமல்ல. தற்போது இக் குடும்பத்திற்கு, நிறுவன நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்குரிய ஒரு தனியான முகாமைத்துவ கட்டமைப்பு காணப்படவில்லை. மேலும் இந்நிறுவனங்கள் பல்வேறுபட்ட அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுவதால் ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்கின்றனர்.

இந்த அதிகாரிகள் கம்பனி பற்றி தன்னிச்சையான தீர்மானங்களை எடுப்பதோடு நிறுவன தலைமையகத்திலிருந்து குறைவான தலையீடுகளையும் வழிநடத்தலையும் பெறுகின்றனர். மேலும் இந்த அதிகாரிகளுக்கிடையேயான ஒத்துழைப்பு குறைந்தளவான மட்டத்திலேயே காணப்படுகின்றது.

ஆனாலும் Tata குடும்பக் கம்பனியை உலகளாவிய ரீதியிலான ஓர் நிறுவனமாக மாற்றுவதற்கான நிறுவன தலைவரின் தூண்டுதல் காரணமாக இந்த அதிகாரிகள் தாம் வியாபாரத்தை முன்னெடுக்கும் வழிமுறையை மாற்ற வேண்டியுள்ளது. அத்தோடு உலகலாவிய ரீதியாக போட்டியிட வேண்டியது என்பது எதனை உட்கருத்தாக கொண்டதெனில் இதுவரை காலமாக சமூகத்திற்கு சேவையாற்றும் வகையில் Tata நிறுவனம் தமது நிறுவன உற்பத்தி ஆலைகள் அமைந்துள்ள இந்தியக் கிராமங்களில் செய்துவந்த பணிகளான குடிநீர் விநியோகம், மருத்துவ வசதிகள் மின்வலு நிலையங்களை அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் செயற்பாட்டினை மேலும் தொடர முடியாது என்பதாகும்.

Tata நிறுவன தலைமையகம் மும்பாயில் (Bombay) யில் அமைந்துள்ளது. இந் நிறுவன தலைவர் தமது நிறுவனத்தை மீளவடிவமைத்து, ஒருமுகப்படுத் ஒழுங்குபடுத்த முடிவு செய்தார். இதற்காக அவர் ஒரு சில முக்கியத்துவமா தொழில்துறைகளில் மட்டுமே கவனத்தை செலுத்தவும், ஏனைய தம நோக்கத்திற்கு பொருத்தமற்ற கம்பனிகளை விற்றுவிடவும் முடிவு செய்தார்.

Ratan இன் இலக்கானது பயண கார்கள் வரிசையில் முதலிடம், மென்பொரு வடிவமைப்பு, சேவை, ஆலோசனை என்பவற்றில் முதலிடம் பெறுவதாகும். இந் இலக்கை அடைவதற்காக Tata கம்பனியின் ஒரு சில மூலாதார துறைகளி பிரசித்தி பெற்ற சர்வதேச கம்பனிகளான AT & T, Mercedes Benz, Silicon Graphic & IBM போன்ற கம்பனிகளோடு கூட்டிணைந்துள்ளது.

சர்வதேச பொருளாதாரத்தில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு Tata கம்பனியானது ஓர் பாதையை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் அவர்கள் தீர்மானங்களை எடுப்பதில் இன்னும் பல கடினத்தன்மைகளை எதிர்நோக்குகின்றனர்.

வினாக்கள்

அ. எவ்வகையான சவால்களை Ratan Tata எதிர்நோக்கினார்? அதை எவ்வாறு நீங்கள் அறிவீர்கள்?

(06 புள்ளிகள்)

ஆ. கம்பனியின் எதிர்கால பாதையை தீர்மானிப்பது தொடர்பாக Ratan Tata முடிவெடுக்கும் போது எவ்வகையான தீர்மானம் எடுக்கும் முறை மிகப்பொருத்தமானது? விளக்குக.

(10 புள்ளிகள்)

இ. இதுபோன்ற சுதந்திரமான, தன்னிச்சையான அதிகாரிகள் குழாம் உள்ள Tata கம்பனியில் குழுத்தீர்மானம் எடுத்தல் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் அமையுமா? இது தொடர்பாக நீங்கள் முன் வைக்கும் ஆலோசனைகள் யாவை?

(12 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

அ. நிறுவனம் ஒன்றில் காணப்படுகின்ற பல்வேறு வகையான முகாமையாளர்களைக் குறிப்பிட்டு அவர்களது அதிகாரம், பொறுப்புகளை வரையறுக்க.

(05 புள்ளிகள்)

ஆ. நிறுவன சூழலினை விளக்கி அதில் உள்ளடக்கப்படும் காரணிகளைக் குறிப்பிடுக.

LIBRARY
11 JAN 2010
Eastern University, Sri Lanka.

(06 புள்ளிகள்)

இ. "முகாமைத்துவ தொழிற்பாடுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவையாகும்". இக்கூற்றினை சுருக்கமாக ஆராய்க.

(07 புள்ளிகள்)
(மொத்தம் 18 புள்ளிகள்)

Q3. அ. திட்டமிடல் என்பதனை விளங்கி, அதன் படிமுறைகளை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஆ. சமூகப் பொறுப்பு என்றால் என்ன? பல்கலைக்கழகங்களின் சமூகப் பொறுப்பினை வரையறுக்க.

(06 புள்ளிகள்)

இ. முகாமைத்துவம் தொடர்பான பழமைவாய்ந்த கோட்பாட்டினையும் மானிடவியலுறவுக் கோட்பாட்டினையும் வேறுபடுத்தி ஆராய்க.

(07 புள்ளிகள்)
(மொத்தம் 18 புள்ளிகள்)

Q4. அ. தலைமைத்துவம் என்றால் என்ன? சிறந்த தலைவருக்குறிய பண்புகள் யாவை?

(05 புள்ளிகள்)

ஆ. சிறந்த தொடர்பாடலுக்கு தடையாக இருக்கும் காரணிகளை குறிப்பிடுக

(06 புள்ளிகள்)

இ. "நிறுவனத்தின் வெற்றியானது சிறந்த தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது." இக்கூற்றினை சுருக்கமாக ஆராய்க.

(07 புள்ளிகள்)
(மொத்தம் 18 புள்ளிகள்)

Q5. அ. ஊக்கப்படுத்தல் (Motivation) என்றால் என்ன? நிறுவனங்களில் அதன் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஆ. குழுத்தீர்மானம் எடுத்தல் எல்லா சந்தர்ப்பத்திலும் பொருத்தமாக அமையுமா? ஆராய்க

(06 புள்ளிகள்)

இ. மாஸ்லோவின் படிமுறை அமைப்பு தேவைக் கோட்பாட்டினையும் ஹேக்ஸ் பேக்ஸின் இரு காரணி கோட்பாட்டினையும் வேறுபடுத்தி ஆராய்க.

(07 புள்ளிகள்)